## கரூர் மாநகராட்சி

**2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி செவ்வாய் கிழமை காலை 3.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்றக் கூட்ட அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

### <u>பொருள்கள்</u>

**1)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு வாங்கல், நெரூர், கட்டளை மற்றும் மேல்மாயனூர் பகுதிகளிலுள்ள தலைமை குடிநீர் நீரேற்று மற்றும் பூஸ்டர் நிலையங்களிலுள்ள மின்மோட்டாருக்கு மாற்று மோட்டார்கள் சப்ளை செய்ய கீழ்கண்டவாறு மண்டலம் வாரியாக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.68.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **மண்டலம்–1** வாங்கல் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வாங்கப்பபளையம் நீரேற்று நிலையத்திற்கு மாற்று மின் மோட்டார்கள், Flow meter சப்ளை செய்தல் மற்றும் CCTV கேமரா பொருத்தும் பணி | 9.50 |
| 2 | **மண்டலம்–2** நெரூர் தலைமை குடிநீர் நீரேற்று நிலையம், பாலம்மாள்புரம், நீருந்து நிலையத்திற்கு மாற்று மின் மோட்டார்கள், Flow meter சப்ளை செய்தல் மற்றும் CCTV கேமரா பொருத்தும் பணி | 15.00 |
| 3 | **மண்டலம் –2** மேல்மாயனூர் தலைமை குடிநீர் நீரேற்று நிலையம் மற்றும் பெரிய குளத்துப்பாளையம் நீருந்து நிலையங்களில் மற்றும் மின் மோட்டார்கள், Flow meter சப்ளை செய்தல் மற்றும் CCTV கேமரா பொருத்தும் பணி | 8.00 |
| 4 | **மண்டலம் – 3** கட்டளை, தாந்தோணி பழைய குடிநீர் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கட்டளை சணப்பிரட்டி குடிநீர் தலைமை நீரேற்று நிலையங்களில் மாற்று மின் மோட்டார்கள், Flow meter சப்ளை செய்தல் மற்றும் CCTV கேமரா பொருத்தும் பணி | 19.00 |
| 5 | **மண்டலம்–4** கட்டளை, தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்தில் (Thanthoni KFW New Scheme) மற்றும் பொன் நகர் நீரேற்று நிலையத்தில் மாற்று மின் மோட்டார்கள், Flow meter சப்ளை செய்தல் மற்றும் CCTV கேமரா பொருத்தும் பணி | 17.00 |
| | **மொத்தம்** | **68.50** |

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.68.50 இலட்சத்தை 15வது நிதிக்குழு மானியம் 2022–2023 (Tied Grant) நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
(இ1/2022)

**தீர்மான எண்.973** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**2)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–1, வார்டு எண்.1 முதல் 11 மற்றும் 28 வரை உள்ள பகுதிகளில் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வரும் பகிர்மான குழாய் மற்றும் வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து வரும் மெயின் பம்பிங் லைனில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்யவும் மேலும் வார்டு எண்.1 முதல் 11 மற்றும் 28 வரை உள்ள பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார், பேனல் போர்டு மற்றும் பைப்லைன் போன்றவற்றில் மின் அழுத்தம் காரணமாக ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.19.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.19.50 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/1829/2023)

**தீர்மான எண்.974** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**3)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–1, வார்டு எண்.1 முதல் 11 மற்றும் 28 வரை உள்ள பகுதிகளில் பொது மக்களுக்கு வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சுகாதாரமான குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீருந்து கிணற்றிக்கு கூடுதலாக தண்ணீர் சப்ளை செய்ய கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கிணறில் உள்ள பகிர்மான குழாய்கள், கேபிள் ஆகியவை சேதமடைந்து உள்ளதால் மேற்காணும் 160 MM குழாய் அளவுள்ள பகிர்மான குழாய் அமைக்கவும் 25 H.P மின் மோட்டார் பழுது சரி செய்து மீண்டும் வட்ட கிணற்றில் இரக்கவும் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.11.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.11.50 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/1827/2023)

**தீர்மான எண்.975** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**4)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–1, வார்டு எண்.1 முதல் 11 மற்றும் 28 வரை உள்ள பகுதிகளில் பொது மக்களுக்கு வாங்கல் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து சுகாதாரமான குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீருந்து கிணற்றிக்கு கூடுதலாக சப்ளை செய்யப்படும் வட்ட கிணறு 1, 2 மற்றும் 3க்கு கூடுதலாக 20 H.P மின் மோட்டார் மற்றும் ஏற்கணவே உள்ள 20H.P மின் மோட்டாருக்கு காயில் கட்டவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.80இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.6.80இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/1826/2023)

**தீர்மான எண்.976** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**5)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–1, வார்டு எண்.11 பாலம்மாள்புரம் முஸ்லீம் தெருவிற்கு முன்புறம் உள்ள பழைய ஆழ்குழாய் கிணற்றில் நீர்வரத்து குறைவாக இருப்பதால் மேற்கண்ட இடத்திற்கு புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் பொருத்தி, இதர பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.65 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.3.65இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/1830/2023)

**தீர்மான எண்.977** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**6)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2, வார்டு எண்.20, 27, 29, 35, மண்டலம்–1 வார்டு எண்.11, மண்டலம்–3 வார்டு எண்.12, 17, 18, 19 அகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நீர் சேகரிப்பு கிணற்றில் ஊற்றின் அளவு குறைவாகி வருவதால் இனிவரும் காலம் கோடை காலமாக இருப்பதாலும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வட்ட கிணற்றில் தூர்வாரி 20HP மின்மோட்டர் பொருத்து பைப்லைன் அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.6.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/1833/2023)

**தீர்மான எண்.978** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**7)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, 27 மற்றும் 29, 35, வார்டு எண்.11, 18, 19 பகுதிகளுக்கு பாலம்மாள்புரம் நீருந்து நிலையத்தின் மூலம் மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிக்கு நீர் ஏற்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி பாலம்மாள்புரத்தில் உள்ள Gas Chlorine Plant மூலம் சுத்திகரிப்பு செய்து குடிநீர் வழங்கப்படுகிறது. மேற்படி குடிநீர் சுத்திகரிப்பு செய்ய பயன்படும் Gas Chlorine தீரும் நிலையில் உள்ளதால் 7 எண்ணிக்கை Gas Chlorine வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1.50இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு .
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/1851/2023)

**தீர்மான எண்.979** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**8)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–1, வார்டு எண்.7 மற்றும் 9 பகுதிகளில் பெரியார் சாலை மற்றும் DHO தெரு, குமரப்பகவுண்டர் தெருக்களில் தற்சமயம் I & A திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் மேற்கண்ட பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் குழாய், மழைநீர் வடிகால் அமைக்கும் இடத்தின் கீழ்பரப்பில் வருவதால் பகிர்மான குடிநீர் குழாயினை மாற்றி புதிதாக அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/1828/2023)

**தீர்மான எண்.980** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**9)** கரூர் மாநகராட்சி மண்டலம்–3, வார்டு எண்.40ல் சுப்பிரமணியா நகரில் சுமார் 50 வீடுகள் உள்ளன. இவ்வீடுகளுக்கு மாநகராட்சி குடிநீர் விநியோகம் ஏதும் இல்லை. எனவே மேற்படி பொது மக்களிள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு குடிநீர் விநியோக குழாய் அமைத்தால்தான் அவர்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலும். எனவே அதற்கான தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.8.25 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.8.25 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/1850/2023)

**தீர்மான எண்.981** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**10)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–2, வார்டு எண்.20, 27, 29, 35, மண்டலம்–1 வார்டு எண்.11, மண்டலம்–3 வார்டு எண்.12, 17, 18, 19 அகிய பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நீர் சேகரிப்பு கிணற்றில் ஊற்றின் அளவு குறைவாகி வருவதால் இனிவரும் காலம் கோடை காலமாக இருப்பதாலும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வட்ட கிணற்றில் தூர்வாரி 20 H.P மின்மோட்டர் பொருத்து பைப்லைன் அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.8.50 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ6/1832/2023)

**தீர்மான எண்.982** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**11)** கரூர் மாநகராட்சியில் I & A 2018-19 திட்டத்தின்கீழ் Providing BT surface and RCC Drain with cover slab at link road from vengamedu fly over to chinnakulathupalayam subway பணியினை மேற்கொள்ளுதலின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் மாநில அளவில் 06.12.2022ம் தேதி அன்று Dhinakaran, Deccan Chronicle Southern மூலமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.1,15,185/—ஐ Enthrall Communications Private Limited, Chennai அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத்தொகை ரூ.1,15,185/— பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/4795/2022)

**தீர்மான எண்.983** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**12)** தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கரூர் மாநகருக்கு வருகை புரிவதையொட்டி கரூர் மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் திட்டபணிகள் விபரம் மற்றும் நடைபெற இருக்கும் திட்டப் பணிகளின் விபரங்களை 21.11.2022 தேதியில் Evening Tamil Nadu ஆங்கில நாளிதழில் பொதுமக்கள் அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.23100/— Evening Tamil Nadu ஆங்கில நாளிதழில் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத்தொகை ரூ.23100/— வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/4795/2022)

**தீர்மான எண்.984** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**13)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்—2, வார்டு எண்.22 ரத்தினம் சாலை அமுதா தியேட்டர் மேல்புறம் உள்ள புதை வடிகால் மெயின் லைன் 57.50 மீட்டர் நீளமுள்ள 800 விட்டமுள்ள பைப்லைன் முற்றிலும் பழுது ஏற்பட்டு கழிவுநீர் செல்லாமல் இரட்டை வாய்காலில் செல்வதால் அப்பகுதி மக்களுக்கு சுகாதார பதிப்பு ஏற்படும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி புதை வடிகால் மெயின் பைப்லைன் மாற்றி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.16.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கான செலவினத் தொகை ரூ.16.00 இலட்சத்தினை மாநகராட்சி வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ5/2022)

**தீர்மான எண்.985** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**14)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்—3 நரிக்கட்டியூர் சாலையானது காந்திகிராமம் முதல் தொழிற்பேட்டை வரை இரண்டு பிரிவுகளாக நமக்கு நாமே திட்டத்தில் போடப்பட்டது. இதற்கு இடையே நரிக்கட்டியூர் ஊர் பகுதியில் 300மீ சாலையானது அகலப்படுத்தப்படாமல் உள்ளது. மேற்படி இணைப்பு சாலையானது மிகவும் பிரதான சாலையாகும், எனவே அகலப்படுத்தாமல் உள்ள 300மீ சாலையினை அகலப்படுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.12.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/2023)

**தீர்மான எண்.986** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**15)** கரூர் மாநகராட்சி பொறியயளர் பிரிவுக்கு சொந்தமான தெருவிளக்கு தானியங்கி வாகன எண்.TN47 AF 2941தெருவிளக்கு தானியங்கி வாகனத்திற்கு **2023–2024**ஆம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான பணிகள் செய்வதற்கு மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணி மணையான ஸ்ரீபாக்கியலட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ், ஈரோடு பணிகள் மேற்கொள்வதற்கான செலவினத்திற்கு இம்மாமன்றத்தின் தீர்மான எண்.**61**, நாள்.**27.05.2022** ரூ.**1,70,000**–க்கு அனுமதி வழங்கி மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மேற்படி வாகனத்திற்கு கூடுதலாக ரூ.**16735/–** செலவினம் ஏற்பட்டுள்ளதை இம்மாநகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள இம்மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.16735/–ஐ (பதிநாராயிரத்துஎழுநூற்.றி முப்பத்தி ஐந்து மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3)மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். (485/2022/அ7)

**தீர்மான எண்.987** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**16)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான வாகன எண்: TN47 AM 5648 Tractor வாகனத்திற்குஆயில் சர்வீஸ் மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ளவும் பொதுசுகாதாரப் பணிகள் அவசரஅவசியம் கருத்தில் கொண்டு தயாரிப்பு நிறுவனமான Mahindra & Mahindra நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையான M/s Adharavaa Tractors & Farm Equipments, Karur அவர்களிடம் நேரடியாக மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**50065/–**க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி வாகனத்திற்குஆயில் சர்வீஸ் மற்றும் பழுது பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ.50065/–ஐ நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3)அரசின் உச்சவரம்பிற்கு மேல் செலவாகும் கூடுதல் செலவினத் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதிக்கலாம். (1227/2023/இ7)

**தீர்மான எண்.988** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**17)** கரூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமான வாகன எண். TN47AH8781 Tipper வாகனத்திற்கு பழுது பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணிமணையான ஸ்ரீபாக்கியலட்சுமி ஆட்டோ ஒர்க்ஸ், ஈரோடு பணிகள் மேற்கொள்வதற்கான செலவினத்திற்கு இம்மாமன்றத்தின் தீர்மான எண்.**63**, நாள்.**27.05.2022** ரூ.**50000/–**க்கு அனுமதி வழங்கி மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மேற்படி வாகனத்திற்கு கூடுதலாக ரூ.**7938/–** செலவினம் ஏற்பட்டுள்ளதை இம்மாநகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள இம்மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணிக்கு ஆகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.7938/–ஐ (ஏழாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி எட்டு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3)**மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(6878/2020/இ7)**

**தீர்மான எண்.989** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**18)** கரூர் மாநகராட்சி பொறியாளர் பிரிவு வாகன எண்.ஈப்பு வாகன எண்.TN47 BA 9517 Innova crystal வாகனத்திற்கு ஆயில் சர்விஸ் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்ய வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணையான Coimbatore Aanamallais Agencies Pvt.Ltd, Karur நிறுவனம் நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.**28172/–** வழங்கியுள்ளது. மேற்படி மதிப்பீட்டு பட்டியலில் உள்ளவாறு TN47 BA9517Innova crystal வாகனம்ஆயில் சர்விஸ் பணிகள் செய்து கொள்ள மேற்படி நிறுனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியும், மேலும் மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் பயன்பாட்டின் வாகனத்திற்கு அவசியமான நம்பர் பிளேட், ஸ்டிக்கர், வாகனத்தின் கொடி ஆகியவற்றை கொள்முதல் செய்து வாகனத்தில் பொருத்தப் பட்டதற்கான செலவினம் திரு.பாலுசாமி, ஓட்டுநர் அவர்களால் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ள தொகை ரூ.**8000/–** ஆக மொத்தம் ரூ.**36172/–**ஐ செலவினத் தொகையினை மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
**1)**மாமன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி பணிக்கான செலவினத்தொகை ரூ.**36172/–**ஐ மாநகராட்சி குடிநீர்நிதியில் செலவினம் செய்துக்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
**3)**வாகனதயாரிப்புநிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமணை Coimbatore Aanamallais Agencies Pvt.Ltd, Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(4707/2022/இ7)**

**தீர்மான எண்.990** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**19)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாப்பிரிவு வாகன எண்.TN47 P0342 – Tipper வாகனத்திற்கு தேவையான (8.25x16SM99), (8.25x16SLSO+R) அளவுள்ள டயர்–**6**, டியூப்–**6** மற்றும் பிளாப்–**6** எண்ணம் கொள்முதல் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிடமிருந்து கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன விலைப்புள்ளியின் மீது முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Vela Tyres,<br>No97/102, Old Bey-Pass Road,Karur-639001. | **85400** |
| 2 | The Yes Pee Vee Tyres,<br>No.25, Ramunajam Nagar,<br>Karur- 639002. | **83100** |
| 3 | FI Cars<br>Redipalayam,<br>Karur. | **84700** |

அலுவலக குறிப்பு
**1)**வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள The Yes Pee Vee Tyres, Karur நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
**2)**மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி The Yes Pee Vee Tyres, Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதற்கும். மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
**3)**மேற்படி பணிக்கு ஆகும் செலவித்தொகை ரூ.**83100/–**ஐ பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(7301/2022/இ7)**

**தீர்மான எண்.991** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**20)** கரூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமானTN47 AL3584 (TATA ACE) வாகனத்திற்கு பழுது பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையில் பணிகள் மேற்கொள்ள வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணையான Shri C.M Motors Karur நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற நேரடி மதிப்பீட்டு பட்டியல்

தொகை ரூ.20000/—ஐ ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.21000/— (இருபத்தி ஓராயிரம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.21000/— (இருபத்தி ஓராயிரம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)வாகனத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

4)பொது சுகதார பணியின் அவசர அவசியம் கருதி வாகன தயாரிப்புநிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை Shri C.M Motors Karurநிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(8336/2022/இ7)**

**தீர்மான எண்.992** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**21)** கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவுக்கு சொந்தமானTN47 AL6711 (TATA ACE)வாகனத்திற்கு பழுது பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையில் பணிகள் மேற்கொள்ள வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணி மணையான Shri C.M Motors Karur நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.15288/—ஐ ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.16000/— (பதினாராயிரம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.16000/— (பதினாராயிரம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)வாகனத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

4)பொது சுகதார பணியின் அவசர அவசியம் கருதி வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனை Shri C.M Motors Karur நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(5185/2022/இ7)**

**தீர்மான எண்.993** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**22)** கரூர் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு சொந்தமானஹிட்டாச்சி 110இயந்திரத்திற்கு 500 மணிநேரம் இஞ்ஜின்ஆயில் சர்வீஸ் மற்றும் பழுது பணிகள் செய்வதற்கு தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையில் பணிகள் மேற்கொள்ள வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமணையான Bharath Diesels, Karur நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற நேரடி மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.11070/—ஐ ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.12000/— (பனிரெண்டாயிரம் மட்டும்) மாநகராட்சி பொதுநிதியின்கீழ் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.12000/— (பனிரெண்டாயிரம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)வாகனத்தின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம். **(1267/2023/இ7)**

**தீர்மான எண்.994** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**23)** கரூர் மாநகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் 2022—ல் தேர்ந்தெடுக்கப்பட உள்ள வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளும் போது அளியும் அங்கி மற்றும் நகருக்கு முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளும் போது அணிய வேண்டிய மேல் அங்கி என்று இரண்டு அங்கிகள் மற்றும் மேயர் மற்றும் துணை மேயர் அலுவலகத்திற்கு தேவையான பொருட்கள் வாங்கும் பணிகளை ரூ.4.00இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு, 15—ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று

விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1) | M/S/Sri.Krishna Traders.Karur | 0.32% குறைவு |
| 2) | Thiru.M.Loganathan.Karur | 0.92 % அதிகம் |
| 3) | Thiru.P.Nallusamy.Karur | 1.38% அதிகம் |

அலுவலக குறிப்பு
1)மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/S Sri Krisna traders.Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.397938/– மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றப் பின்னேற்பு வழங்கலாம். (இ1/2023)

**தீர்மான எண்.995** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**24)** திரு.எம்.தங்கராஜ், 18வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

1)18வது வார்டு பகுதிகளில் பாரதியார் தெருவின் 1 முதல் 6 வரை உள்ள தார் சாலைகள் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றன. எனவே அதை புதுபித்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
2)வார்டு எண்.18 ராஜா நகர் 1 முதல் 8 தெருக்கள் வரை இருகின்றன. இவற்றில் 5 தெருக்கள் மண் சாலையாக இருக்கின்றன. அதை தார்சாலையாக மாற்றி தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
3)பாரதியார் தெருவின் 1 முதல் 6 வரை உள்ள தெருக்களில் உள்ள சாக்கடைகள் சேதமடைந்துள்ளன. அவற்றை சரி செய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
4)ராஜா நகர் 8வது கிராஸ் கல்வெட்டு பாலம் பழுதடைந்து பெரிய ஓட்டை விழுந்துள்ளதால் அதனை உடனே சரிசெய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
5)பாரதியார் தெரு 5வது தெருவில் உள்ள பாலம் சேதமடைந்துள்ளதால் அதனை உடனே சரிசெய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
6)18வது வார்டில் காந்திகிராமத்தில் இருந்து பசுபதிபாளையம் செல்லும் ரோட்டில் உள்ள கல்வெட்டு பாலம் பழுதாகி உள்ளதால் வாகனங்கள் சென்று வர சிரமமாக உள்ளது. அதனை சரிசெய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
7)காமதேனு நகர் பகுதியில் சுமார் 30க்கும் அதிகமான குடிநீர் இணைப்பு உள்ள பகுதியில் குடிநீர் சரி வர செல்லவில்லை. எனவே அந்த பகுதியில் உள்ள குடிநீர் பைப்லைனை விஸ்தரிப்பு செய்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
8)ராஜா நகர், காமதேனு நகர், சுவாமிநாதன் நகர் ஆகியவற்றில் உள்ள 3 தெருக்களில் 20 ஆண்டுகளுக்கு மேல் தெருவிளக்கு இல்லை. இதற்கு புதிய தெருவிளக்கு அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
9)கரூர் வாங்கல் உள்ள மின்மயானத்தின் வடபுரத்தில் உள்ள எரியூட்டும் மயானத்தை சுற்றி சுற்று சுவர் ஏற்படுத்தி தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.
10)வார்டு எண்.18ல் காந்தி கிராமம் பாரதியார் தெரு முதல் தெருவில் கழிவுநீர் வசதி செய்து தருவதற்கும், அதே பகுதியில் சுமார் 200மீட்டர் அளவுள்ள மண்சாலையை தார்சாலையாக மாற்றி தருவதற்கும் இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.996** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(ஒ/ம்) வெ.கவிதா
மேயர்
கரூர் மாநகராட்சி

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி